**செய்தி வெளியீடு எண் 07** **நாள் 03.01.2017**

திருவள்ளூர் மாவட்டத்தில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ், பள்ளி சத்துணவு மையங்களில் 228 சத்துணவு சமையல் உதவியாளர் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை நிரப்பிட, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் 22.07.2015 தேதியிட்ட “வேலை வாய்ப்பு செய்தி அறிவிக்கை” ந.க.எண் 460/2015/சஉதி2-ன்படி, விண்ணப்பங்கள் பெறப்பட்டு மாவட்ட ஆட்சியரகத்தில் கடந்த 03.09.2015 மற்றும் 04.09.2015 ஆகிய நாட்களில் நேர்முக தேர்வு நடைபெற்றது. இதற்கான தேர்வு செய்யப்பட்டோர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை. தற்போது 30.11.2016 வரை உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டி நிர்வாக காரணங்களின் அடிப்படையிலும், ஏற்கனவே விண்ணப்பிக்காதவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கிடும் வகையிலும், கடந்த 03.09.2015 மற்றும் 04.09.2015 ஆகிய நாட்களில் திருவள்ளூர் மாவட்டத்தில் சமையல் உதவியாளர் பதவியிடங்களுக்கான நடைபெற்ற நேர்முக தேர்வு மற்றும் அதனையொட்டி நடைபெற்ற அனைத்து நடவடிக்கைகளும் இரத்து செய்யப்படுவதாக இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

புதியதாக நடத்தப்படவுள்ள நேர்காணலுக்கான விண்ணப்பம் பெறுதல் மற்றும் இதர விபரங்கள் தனியாக அறிவிக்கை செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**